# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திரு ப வேலமுருகன் பி.இ
உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தேனி மாவட்டம்.
கதவு எண் 446 A, 17-வது வார்டு
நேருஜி வீதி, அல்லி நகரம்
தேனி - 625 531
E mail ID : thenidtcp@gmail.com
www.tn.gov.in/dtcp

பெறுநர்

தலைவர்
வடபுதுப்பட்டி ஊராட்சி
பெரியகுளம் வட்டம்
தேனி மாவட்டம்.

ந.க.எண் 1723/2021/தே.மா.2 நாள் 26.04.2022

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தேனி மாவட்டம் - பெரியகுளம் வட்டம் - பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் - வடபுதுப்பட்டி ஊராட்சி - வடவீரநாயக்கன்பட்டி கிராமம் - சர்வே எண்கள் 1288, 1289 மற்றும் 1290/2-ல் 9700 ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:

1) மனுதாரர் திரு S.K.V. ராஜேந்திரன் அவர்களின் விண்ணப்பம், நாள் 24.11.2021
2) வேளாண்மை இணை இயக்குநர், தேனி அவர்களின் கடிதம் எண் தி1/2839/2021, நாள் 29.04.2021,
3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தேனி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண் 1723/2021/தே.மா.2, நாள் 11.01.2022
4) தானபத்திரம் ஆவணம் எண் 1903/2022, நாள் 25.02.2022 மற்றும் தானபத்திரம் ஆவணம் எண் 1905/2022, நாள் 25.02.2022
5) மனுதாரர் கடிதம் நாள் 22.04.2022 (OSR கட்டணம் மற்றும் நன்னிலை வரி செலுத்தியது)
6) அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 30.08.2017
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13686/2017/எல்எ1, நாள் 08.09.2017
8) அரசாணை எண் 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.06.2004
9) அரசாணை எண் 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 4.5.2017
10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 2201/2017/சிபி, நாள் 28.09.2017
11) அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும்
அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020
12) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 4367/2019/BA2, நாள் 05.02.2020

13) அரசாணை எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 23.09.2020

14) அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 09.12.2020

15) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 4167/2019/TCP2, நாள் 14.08.2021

16) சார்பதிவாளர் தேனி சார்பதிவாளர் அவர்களின் கடிதம் எண் 74/2022 நாள் 28.01.2022

***********

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் வடபுதுப்பட்டி ஊராட்சி, வடவீரநாயக்கன்பட்டி கிராமம், சர்வே எண்கள் 1288, 1289 மற்றும் 1290/2-ல் 9700 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரி பார்வை (1)-ல் சுட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமைந்த சாலைகள், பொது ஒதுக்கீடுகள், உள்ளாட்சி உபயோக பகுதி மற்றும் TANGEDCO உபயோக பகுதி ஆகியவைகள் உள்ளாட்சிக்கும், TANGEDCO-விற்கும் தானமாக தானபத்திர எண் 1903/2022, நாள் 25.02.2022 தானபத்திரம் ஆவணம் எண் 1905/2022, நாள் 25.02.2022 மூலம் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1) மனைப்பிரிவுக்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(தே.மா) **எண். 24/2022** என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) (a)பார்வை 14-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 11-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47(11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் 'Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street light from the applicants'. After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directorly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் 'Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street light etc., as per the standards specified by Local Body'.

2) (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலையில் இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை, நாள் 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3) பார்வை 6 மற்றும் 7-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4) The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5) பார்வை (9)-ல் கண்டிய அரசாணையின்படி நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி(3) -ன்படி உள்ளாட்சிக்கான கூராய்வு கட்டணமாக ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கணக்கு தலைப்பு

0217 Urban Development

60 - other urban Development Schemes

800 - other Receipts

AS - Receipts under Landuse Conversion charges

227 Non Taxation fees - 09 collections

(DPC-0217-60-800-AS-22709)

பார்வை 5-ல் கண்ட கடிதம் மூலம் OSR கட்டணம் மற்றும் நன்னிலை வரி கட்டணம் அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 14-ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட பார்வை 5-ல் கண்ட தான ஆவணத்தின் அசல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தலைவர், வடபுதுப்பட்டி ஊராட்சி கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற தலைவர், வடபுதுப்பட்டி ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம்.

இணைப்பு

வரைபடம் மற்றும் நிபந்தனைகள் - 3 நகல்கள் மற்றும்

பார்வை 4-ல் கண்ட தானபத்திரம் ஆவணம் எண் 1903/2022, நாள் 25.02.2022

<u>நகல்</u>

1. திரு.S.K.V.ராஜேந்திரன்,
த/பெ.வேலுச்சாமி,
சடையால்பட்டி,
கோடாங்கிபட்டி,
போடிநாயக்கனூர் வட்டம்,
தேனி மாவட்டம் 625 531
— செயலாணை கடிதம் மட்டும்.

2. மேற்பார்வை பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
மின் பகிர்மான கழகம்,
தேனி.
— செயலாணை, வரைபடம் மற்றும் பார்வை 4-ல் கண்ட தான ஆவண எண். 1905/2022, நாள் 25.02.2022 அசல்

3. CHAIR PERSON,
Tamil Nadu Real Estate Regulatory Authority
CMDA Tower - II, First Floor, No-1A,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai - 600 008.
— செயலாணை கடிதம் மற்றும் வரைபடம் - 1

4. வட்டாட்சியர்,
பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகம்,
பெரியகுளம்,
தேனி மாவட்டம்.
— செயலாணை கடிதம் மற்றும் வரைபடம்-1

5. உதவி இயக்குநர்,
நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி.
— செயலாணை கடிதம் மற்றும் வரைபடம்-1

6. தொழில்நுட்ப வைப்பறை -1

44

**தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம்**
**வடபுதுப்பட்டி ஊராட்சி தலைவர் (பொ) அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திருமதி.S.பிரியா**

**செ.மு. ந.க.எண். 01 / 2022-2023 நாள். 10.06.2022**

பொருள் : **மனைப்பிரிவு - தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், வடபுதுப்பட்டி ஊராட்சி, வடவீரநாயக்கன்பட்டி கிராமம், சர்வே எண்கள் 1290/2, 1288, 1289-ல் உள்ள 2.40 ஏக்கர் (9700 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளை அங்கீகரித்து உத்தரவிடுதல்**

பார்வை : 1) அரசாணை எண் 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 04.05.2017

2) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தேனி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண் 1723/2021/தே.மா 2, நாள் 26.04.2022

3) மனுதாரர் S.K.V.ராஜேந்திரன் அவர்களின் விண்ணப்பம் நாள் 17.05.2022

.......

**உத்தரவு :**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், வடபுதுப்பட்டி ஊராட்சி, வடவீரநாயக்கன்பட்டி கிராமம், சர்வே எண்கள் 1290/2, 1288, 1289-ல் உள்ள 2.40 ஏக்கர் (9700 ச.மீ) பரப்பளவு இடத்தில் மனைப்பிரிவு அனுமதிகோரி பார்வையில் 3-ல் பெறப்பட்ட விண்ணப்பம்படி பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள தேனி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 1-ல் கண்ட அரசாணையின்படி கூராய்வு கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதினாயிரம் மட்டும்) பல்வகை ரசீது எண் 16727, நாள் 10.06.2022 மற்றும் விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு தொகை ரூ.47,000/- (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யப்பட்டு இசெலான் எண் 20220606002269, நாள் 06.06.2022-ன்படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களில் உள்ள தங்களது 40 மனைப்பிரிவுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் நிர்வாக அனுமதி வழங்கி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. நகர் ஊரமைப்புத் துறையினால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் ஊராட்சியின் முன் அனுமதியின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்தவொரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்தவிதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்தவொரு மனையும் பொதுக் காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னரே ஊராட்சியின் அனுமதி வழங்கப்படும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பி பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

4-5

மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் ஊராட்சியின் அனுமதி பெற வேண்டும். மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் ஊராட்சி பரிசீலித்து எடுக்கும் இறுதி முடிவிற்கு கட்டுப்பட வேண்டும். உரிமையில் மாறுபாடு கண்டறியப்பட்டால் நிர்வாக அனுமதி இரத்து செய்யப்படும்.

10. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைபிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

11. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்டுள்ள சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஊராட்சியால் இரத்து செய்யப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட **மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் :**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 9700 ச.மீ. |

<u>ஒதுக்கிய மனைகள்</u>

| | | |
|---|---|---|
| மனை எண்கள் (01 முதல் 40 வரை) | - | 40 எண்ணம் |
| பொது ஒதுக்கீடு : | | (தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது) |
| உள்ளாட்சி உபயோகம் | - | 43.50 ச.மீ (0.61%) |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) | - | 51.48 ச.மீ (0.72%) |

D. Priya. 10/06/2022

தலைவர் (பொ)

தலைவர் (பொ)

வடபுதுப்பட்டி ஊராட்சி

மனைப்பிரிவு வரைபடம் :

ம.வ/ந.ஊ.உ.இ (தே.மா) எண்.24 / 2022 - அசல் 3 எண்ணம்

பெறுநர் :

திரு.S.K.V.ராஜேந்திரன்
S/o.வேலுச்சாமி
சடையால்பட்டி,
கோடாங்கிபட்டி,
போடிநாயக்கனூர் வட்டம்,
தேனி மாவட்டம்.

நகல் :

1) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம்
2) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி மாவட்டம்.
3) இணை சார் பதிவாளர், தேனி.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate